**28.03.2025**

**இ.தி.மு.மனு எண். 10 /2023**

**ம.சா.1- திரு. பால்வர்ணராஜா**

**சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு மனுதாரர் எப்படி உறவு என்றால் என் அப்பாவின் தம்பி மகன் உடன் பிறந்த தம்பி மகனா என்றல் இல்லை என் அப்பாவுக்கு ஒன்றுவிட்ட தம்பி மகன். என் அப்பாவின் ஒன்றுவிட்ட தம்பி மகன் என நான் முதல் விசாரணை சாட்சி வாக்குமூலத்தில் சொல்லிவல்லை என்றால் சரிதான். மனுதாரரர் எனக்கு உறவுக்காரர் என காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரரர் எனக்கு உறவுக்காரர் அல்ல என்றும மனுதார் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு நான் வரவில்லை என்றும் மனுதாரரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 27.10.2017 ம் தேதி மனுதார் எதிர்மனுதார் திருமணம் நடந்த சமயத்தில் எடுக்கப்படட புகைப்படங்கள் வீடியோ ஆகியவறற்ற பார்வையிட்டால் நான் திருமணத்திற்கு வந்தேனா என்பதை தெரிந்து கொள்ளமுடியும் என்றால் சரிதான். பூ வைக்கும் நிகழ்ச்சியில் வீடியோ, புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகைப்படம் வீடியோவில் நான் இருப்பது துலங்காது என்றால் சரிதான் புகைப்படம் எடுத்த போதுநான் வெளியே இருந்தேன். பூ வைக்கும் நிகழ்ச்சிக்கு என் மனைவி குழந்தைகள் வந்தார்களா என்றால் இல்லை. திருமணத்திற்கு என் மனைவி குழந்தைகள் வந்தார்களா என்றால் எனக்கும் என் மனைவிக்கும் பிரச்சனை இருந்தது அதனால் அவர் வரவில்லை. நான் மனுதாரருக்கு நெருங்கிய உறவினர் இல்லை என்பதால் தான் குடும்பதோடு திருமண நிகழ்ச்சியல் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல தற்போது என் மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேனா என்றால் ஆமாம். மனுதார் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். திருமண சமயத்தில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு திருமணம் குறித்து அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழில் எதிர்மனுதாரர் மனுதார் படிப்பு விபரம் அச்சிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். மனுதாரர் மயிலாடியில் உள்ள பள்ளிக்கூடத்தில் 10ம் வகுப்பு படித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 திருமண அழைப்பிதழ் மனுதாரர் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.03.28 18:11:29 +0530

அச்சிடப்பட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் குடும்பம் பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் கலைச்செல்வியை பார்த்தேனா என்றால் 2 முறை பார்த்தேன். திருமணத்திற்கு முன்பு நடந்த பேச்சுவார்த்தையின் போதும் நிச்சயதார்த்தம் நடந்த போதும் திருமணம் குறித்து என்ன பேசப்பட்டது என்று தெரியுமா என்றால் முழுமையாக தெரியாது. 10ம் வகுப்பு மட்டுமே படித்துள்ளதால் அவரை எதிர்மனுதார் வேண்டாம் என்று சொன்ன விபரம் எனக்கு நேரில் தெரியுமா என்றால் தெரியாது மனுதாரரின் அப்பா சொல்லி தெரியும். எனது முதல் விசாரணை சாட்சி வாக்குமூலத்தில் மனுதாரர் நேரடியாக சொல்லி எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் முதலில் அப்பா சொன்னார் அதன் பிறகு அவர் சொன்னார். மனுதாரர் சென்னையில் இருந்து தொலைபேசி வாயிலாக சொன்னார். அவ்வாறு சென்னையில் இருந்து தொலைபேசியில் சொன்னார் என்பதை முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருககும் பிரச்சனை ஏற்பட்டு சண்டை நடந்ததை நேரில் பார்த்தேனா என்றால் ஆமாம் ஒரு முறை பார்த்தேன். எந்த தேதியில் எங்கு வைத்து எப்போது சண்டை நடந்தது என்றால் தேதி தெரியாது குமாரபுரத்தில் திருமண வீட்டில் வைத்து சண்டை நடந்தது. மேற்படி விபரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் தற்போது கேட்பதால் சொல்கிறேன். மனுதாரருக்கு கடன் இருந்தது என்றால் அதிக கடன் இல்லை கொஞ்சம் கடன் இருந்தது. 3 லடசத்தில் இருந்து 5 லட்சம் வரை கடன் இருந்தது. திருமண சமயத்தில் அவருக்கு எவ்வளவு மாத சம்பளம் என்றால் ரூ.65,000/-ம் . மனுதாரருக்கு நிறைய கடன் இருந்தது என்றும் கடன் பிரச்சனையால் தான் அவர் விஷம் அருந்தி தற்கொலைக்கு முயன்றார் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் சிகச்சை எடுத்த போது கடன் பிரச்சனையால் விஷம் அருந்தி தற்கொலைககு முயற்சித்ததாக டாக்டரிடம் சொன்னார் என்றால் சரியல்ல. விஷம் அருந்திய அன்றைய தினம் நான் மனுதாரை பார்க்கவில்லை என்றால் சரிதான் மறுநாள் பார்த்தேன். நாகர்கோவில் மகளிர் காவல்நிலையத்தில் எதிர்மனுதார் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும் வரதட்சணை கேட்பதாக சொல்லியிருந்தார். விசாரணைக்கு நான் உடன் போனேனா என்றால் ஆமாம். சேர்ந்து வாழ வேண்டும் என்று எதிர்மனுதார் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.03.28 18:11:33 +0530

கொடுத்த புகாருக்கான விசாரணை முடிவு எனக்கு தெரியாது. புகார் மனுவிற்கான விசாரணையில் நான் கலந்து கொள்ளவில்லை என்றும் கலந்து கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் கலைச்செல்வி தாக்கல் செய்த குடும்ப வன்முறை தடுப்பு பாதுகாப்பு சடடத்தில் வள்ளியூர் நீதிமன்றத்தில் ஆஜராக வரும் வழியில் மனுதாரரை எதிர்மனுதாரர் அடித்து காயப்படுத்தி வாகனத்தை பிடுங்கி வைத்துக்கொண்டதாக நான் சொல்லியுள்ளேன் அதற்காக புகார் கொடுத்துள்ளோமா என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு நடந்ததாக கூறும் சம்பவ சமயத்தில் நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. அதன் பிறகு ஒரு நாள் நீதிமன்றததிறகு வரும் போது பிரச்சனை இருந்தது. அந்த பிரச்சனைக்கு நீதிமன்றத்திலோ, காவல்நிலையத்திலோ புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. மனுதாரருக்கு அடியாளாக கூலிக்கு வந்துள்ளேன் என சொன்னால் சரியல்ல. தென்தாமரைக்குளம் காவல்நிலையத்தில் என் மீது எத்தனை வழக்கு உண்டு என்றால் என் மீது வழக்கு இல்லை. எதிர்மனுதார் வீட்டில் தனியாக இருந்த சமயத்தில் அவர் வீட்டுக்குள் நுழைந்து இடைஞ்சல் செய்ததாக சொன்னால் சரியல்ல அப்படி நடக்கவில்லை. மனுதாரரின் தகப்பனார் சாலை விபத்தில் காயம்பட்டு நடக்க முடியாமல் இருப்பதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் தான் மனுதாரரிடம் பணம் பெற்றுக்கொணடு அடிக்கடி எதிர்மனுதாரர் வீட்டுக்கு மது அருந்தி சென்று தகராறு செய்வேன் என்றால் சரியல்ல. மது அருந்தும் பழக்கம் கிடையாது எப்போதாவது ஒரு நாள் தான் குடிப்பேன். எனக்கு வழக்க சங்கதி தெரியாது என்றும் மனுதாரர் கேட்டுக்கொண்டதால் அவரிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டு அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> - இல்லை**

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.03.28 18:11:39 +0530